பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 06 2026 FRIDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) உலகமே இந்தியாவை நம்பிக்கையுடன் உற்று நோக்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) பாஸ்போர்ட் சேவை தொலைதூர பகுதிகளுக்கும் எளிதாக கிடைப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தமிழகத்தில் ஐந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்களை உருவாக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4) சட்டப்பேரவை நடவடிக்கைகளை முழுமையாக நேரலையில் ஒளிபரப்ப தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி-யும், அஇஅதிமுக-வும் வலியுறுத்தியுள்ளன.

5) உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

. . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

உலகமே இந்தியாவை நம்பிக்கையுடன் உற்று நோக்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்தியாவுடன் வர்த்தகம் புரிய அனைத்து நாடுகளும் விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகின் நன்மைக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2014-ஆம் ஆண்டு ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இருந்த பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி, தற்போது 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி 2014-ஆம் ஆண்டு 46 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததாக அவர் கூறினார்.

இது கடந்த நிதியாண்டில், ஒரு லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பாஸ்போர்ட் சேவை தொலைதூர பகுதிகளுக்கும் எளிதாக கிடைப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மண்டல பாஸ்போர்ட் அதிகாரிகளின் மூன்று நாள் வருடாந்திர மாநாட்டில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

டிஜிட்டல் நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக பாஸ்போர்ட் சேவை திகழ்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக முதலீடுகள் பெருமளவு அதிகரித்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், உலகின் நம்பிக்கைக்குரிய நட்பு நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

38 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**33** நாடுகளின் உயரிய விருதுகள் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது அவரது தலைமை பண்புக்கு கிடைத்த அங்கீகாரம் என்றும் அவர் கூறியுள்ளார்.

**70** லட்சம் கோடிக்கும் கூடுதலான நேரடி அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**100-**க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கோவிட் தடுப்பு மருந்து விநியோகம் செய்யப்பட்டதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஐந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்களை உருவாக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோவை, மதுரை ஆகிய இடங்களை தலைமையிடமாக கொண்டு இந்த மண்டலங்கள் செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் வெளிப்படையான நிர்வாக செயல்திறன் மற்றும் விரைவான சேவையை வழங்குவதை உறுதி

செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகளை எவ்வித தடையும் இன்றி முழுமையாக நேரலை செய்ய தவெக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாற்றத்திற்கான ஆட்சி என்று கூறிவிட்டு, முந்தைய திமுக ஆட்சி போலவே தேவையான பகுதிகளை மட்டும் நேரலை செய்வது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவை நிகழ்வுகள் முழுமையாக நேரலை செய்யப்படும் என்று தவெக வாக்குறுதி அளித்திருப்பதையும் திரு நயினார் நாகேந்திரன் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அஇஅதிமுக-வும் சட்டப்பேரவை நிகழ்வுகளின் நேரலை ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதை வன்மையாக கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆட்சி மாறினாலும், காட்சி மாறவில்லை என்ற நிலை தொடர்வதாக குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் எண்ணம் தவெக அரசுக்கு இல்லை என்பதையே இது உணர்த்துவதாகவும் அஇஅதிமுக தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

சர்வதேச யோக தினம் நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ளதையொட்டி, சேலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற யோகாசன நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

உடலை இலகுவாக்கும் யோகாசன பயிற்சிகள் மற்றும் மூச்சுப்பயிற்சியில் இவர்கள் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் - 35 Sec.*** )

மன அழுத்தத்தை போக்க யோகா பயிற்சி பெரும் உதவிகரமாக உள்ளது என்று இதில் பங்கேற்ற மாணவர்கள் தெரிவித்தனர்.

***(Sound Byte — மாணவர்கள் - 35 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 34 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூரில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற யோகா பயிற்சி முகாமில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

---------------

மதுரை மாவட்டத்தில் உயர்கல்வி வழிகாட்டுதல் தொடர்பான குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு ஆகாஷ் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு ஜவுளி வடிவமைப்பு உற்பத்தி தொடர்பான பயிற்சி தாட்கோ மூலம் வழங்கப்பட உள்ளதாகவும், விருப்பமுள்ளர்கள் அதற்கான இணையதளத்தில் பதிவு செய்யுமாறும் ஆட்சியர் திருமதி சினேகா கூறியுள்ளார்.

---------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் மேற்கொண்ட

சோதனையின்போது கணக்கில் வராத 2 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சிங்கப்பெண் அதிரடிப்படை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

---------------

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் இடி - மின்னல் தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

---------------

சென்னை — ஜோத்பூர் இடையே சிறப்பு ரயில் வரும் 30-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் இறுதிவரை செவ்வாய்க்கிழமைதோறும் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜெர்மனியின் **Suhl-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **10** மீட்டர் பிரிவில் **Sejal Kamble** தங்கப்பதக்கத்தையும், **Himanshi** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

**Vanshika Chaudhary, Navya, Sanskriti Bana** ஆகியோரை கொண்ட இந்திய அணி மகளிர் குழு பிரிவிலும் தங்கப்பதக்கத்தை வென்றது.

மகளிர் **50** மீட்டர் பிரிவில் **Prachi Gaikwad** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **25** மற்றும் **50** மீட்டர் குழு பிரிவில் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

-----------------

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில், இந்தியாவின் **Prachi, Minakshi Hooda** மற்றும் **Nikhil** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **57** கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Prachi,** சீன தைபே-யின் **Wu Shih Yi-**வை வென்றார்.

மகளிர் **51** கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Minakshi Hooda** — கஜகஸ்தானின் **Alua Balkivekova** -வை வென்றார்.

ஆடவர் **55** கிலோ எடைப்பிரிவில் **Nikhil**-லும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---------------

உலக ஸ்னூக்கர் குழு சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

---------------

பிரெஞ்ச் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நித்தியஸ்ரீ சுமதி சிவன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---------------

மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**